**DEPOSITION OF WITNESS**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No. 120/2023**
**Prosecution Witness - PW2**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. ஜான் ஜஸ்டின் |
| Father's Name | : | |
| Age | : | |
| Calling | : | |
| Village | : | |
| Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 28.10.2025.
(Accused Present).
முதல் விசாரணை–

நான் அஞ்சாரி கோணங்காட்டில் வசித்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். சாட்சிகள் பிபின், ராஜசேகரை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 என்னுடைய தம்பி. 13.01.2022 அன்று திருமண வீட்டில் வைத்து பந்தி பரிமாறும்போது ஆன்டனி ராஜன் என்ற வினோவிற்கும், எனது அண்ணன் மகன் ரெக்சலின் மற்றும் மற்றொரு அண்ணன் மகன் வினுவிற்கும் தகறாறு ஏற்பட்டது. அதனை வைராக்கியமாக வைத்து 16.10.2022 அன்று எங்கள் கோயிலில் 9ம் திருவிழா தேர் இழுப்பு நடந்தது. அதிகாலை 3.45 – 4.00 மணியளவில் தேர் இழுத்து வைத்துவிட்டு நாங்கள் வீட்டிற்கு போகும்போது எனது தம்பி ஜோஸ் அகஸ்டின் ராஜ் எனக்கு கொஞ்சம் முன்னால் சென்றுகொண்டிருந்தார். கோயில் மண்டபத்தின் முன்பு வைத்து ஆன்டனி ராஜன் என்ற வினோ யமாகா RX 100 பைக்கில் வந்து , எனது தம்பியை பார்த்து கெட்டவார்த்தை பேசி பையில் மறைத்து வைத்திருந்த கம்பியால் எனது தம்பியின் தலையில் அடித்தார், இரத்த காயம் ஏற்பட்டது. அடித்த அடி இடது கண்ணில் பட்டது, வலது கால் முட்டில் அடித்தார். பின்னால் வந்த நான் ஓடிவந்து தடுக்க போனபோது, ஆஜர் எதிரி ஆன்டனி ராஜன் என்ற வினோவின் அடி எனது கழுத்தில் முதல் அடி விழுந்தது, 2 வதாக எனது

வலது கையின் நடுவிரலில் அடிபட்டது, வலது கால் முட்டில் அடி கிடைத்தது, அருகில் பார்த்து கொண்டிருந்த ராஜசீலன், பிபின், ரச்கலின் மற்றும் டைட்டஸ்ராஜ் ஆகிய 4 பேரும் ஓடி வந்தார்கள். அவர்கள் ஓடி வருவதை பார்த்தவுடன் ஆஜர் எதிரி கையில் இருந்த கம்பியை எடுத்து காட்டி, அடுத்த திருவிழா வருவதற்குள் உங்களை தீர்த்து கட்டுவேன் என்று கூறி RX 100 பைக்கில் சென்றுவிட்டார். பின்னர் அடிபட்ட என்னையும் எனது தம்பியையும் ஆட்டோ பிடித்து மிதுனா மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். முதல்உதவி அளித்த பிறகு எனது தம்பியை உள்நோயாளியாக வைத்து சிகிட்சை கொடுத்தார்கள், நான் தினமும் மருத்துவமனைக்கு சென்று மருத்து வைத்துக் கொண்டேன். மருத்துவமனையில் வைத்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**